Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 17 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | ஒக்ரோபர் 14, 2020

# மணியுடன் தொடர்பு: உறுப்பினர்களுக்கு இறுதி எச்சரிக்கை

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணி வண்ணனுடன் தொடர்பைப் பேணி வருவதாகக் கூறி உள்ளூராட்சி உறுப்பினர்கள் சிலரிடம் அவர்களின் இறுதித் தெரிவினை தமிழ் தேசிய மக்கள் முன்னணி கோரியுள்ளது.

இந்தத் தகவலை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் கிடைத்த உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சிலர் எமக்குத் தெரிவித்தனர்.

"தாங்கள் எமது அரசியல் இயக்கத்துடன் தொடர்ந்து பயணிப்பது அல்லது பயணிக்காது விலகுவது தொடர்பான தங்களின் இறுதித் தெரிவை தாங்கள்



தீர்மானிப்பதற்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்படுகிறது. இக் கடிதம் கிடைக்கப் பெற்று 14 நாள்களுக்குள் தங்களின்

03

## மணிவண்ணனைத் தொடர்ந்து மயூரனும் நீக்கப்பட்டார்

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் மயூரனின் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் நிலைப்பாட்டை முகநூலில் விமர்சனம் செய்ததாக

03

# 10 நாட்களில் 1,500 பேருக்கு கொரோனா தொற்று

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை கொரோனா வைரஸ் (கொவிட் 19) கொத்தணியில் இதுவரை 1,591 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 1,036 பேர் அந்த ஆடை தொழிற்சாலையில் தொழில் புரிவதுடன் ஏனைய 555 தொற்றாளர்களும் அவர்களுடன் நேரடி தொடர்பை பேணியவர்களாவர்.

இந்த தகவலை கொரோனா வைரஸ் (கொவிட் 19) பரவலை கட்டுப்படுத்தும் தேசிய செயலணியின் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட திகதி விபரம்

முதல் வாரத்தில் ஒக்டோபர் 5 முதல் 11 வரை - 1186 ஒக்டோபர் 12 - 121 ஒக்டோபர் 13 - 90 ஒக்டோபர் 14 - 194 (காலை 6 மணி வரை)

03

# ரிசாட் எம்.பி. தலைமறைவு!

## ஆறு குழுக்கள் தேடுதல் கணக்காளர் கைது



குற்றவியல் விசாரணைப் பிரிவின் ஆறு குழுக்கள் தேடுதல் நடத்திய போதும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் இன்று மாலை வரை கைது செய்யப்படவில்லை.

கொழும்பு மற்றும் மன்னாரில் உள்ள பதியுதீனின் வீடுகளை குற்றவியல் விசாரணைப் பிரிவின் சோதனை செய்த போதிலும், அவர் அந்த வீடுகளில் இல்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

03

# 110 பேருக்கு கொரோனா கட்டுநாயக்கவில் ஊரடங்கு

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவில் நாளை அதிகாலை 5 மணி முதல் மறுஅறிவிப்பு வரும் வரை ஊரடங்கு உத்தரவு விதிக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் 43 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை இன்று கண்டறியப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை மாலை 5 மணிவரை, 110 பணியாளர்கள் கோரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் உள்ள தொழிற்சாலைகள் செயல்பட அனுமதிக்கப்படும் என்று இராணுவத் தளபதி தெரிவித்தார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக

03

# மாட்டக்களப்பு மாவட்டச் செயலர் திடீர் இடமாற்றம்! புதியவர் நியமனம்!!



மட்டக்களப்பு மாவட்டச் செயலாளராக இருந்த கலாமதி பத்மராஜா மாவட்டச் செயலர் பதவியிலிருந்து, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய மாவட்டச் செயலாளராக இலங்கை அரச நிர்வாக சேவையில் மூத்த அதிகாரியான கணபதிப்பிள்ளை கருணாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சின் செயலாளராக கடமையாற்றும் கே. கருணாகரன், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளராக இன்று (ஒக்.14) புதன்கிழமை பிற்பகல் நியமன கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

03



# அதிக விலையில் பொருட்கள் விற்பனை செய்தால் முறைப்பாடு செய்ய தொலைபேசி எண்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க அதிக விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டால் உடனடியாக யாழ். மாவட்ட செயலகத்தின் முறைப்பாட்டு பிரிவான 0212 22 50 00 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு பொதுமக்கள் முறைப்பாட்டை பதிவு செய்ய முடியும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் சூழ்நிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் நெருக்கடியான நிலைமைகள் காணப்படுகின்றன. எனினும் இன்று வரை எவ்வித அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படவில்லை.


அதுமட்டுமின்றி நாட்டு மக்களின் நன்மை கருதி அரசாங்கம் தற்போது அத்தியாவசிய

03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# வவுனியாவில் இரு பிள்ளைகளின் தாயார் சடலமாக மீட்பு





வவுனியா, கற்பகபுரம் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட புதிய கற்பகபுரம் பகுதியில் இரு பிள்ளைகளின் தாய் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் இன்று (14) காலை 7.00 மணி தொடக்கம் 8.45 மணி வரையிலான காலப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வீட்டில் இருந்து காலை 6.30 மணி அளவில் 3 வயது மற்றும் 7 வயது பிள்ளைகளுடன் கணவர் அவரது தாயார் வீட்டிற்கு சென்றுள்ளார்.

இதன் போது குறித்த குடம்ப பெண் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார். காலை 8.45 மணி அளவில் வீடு திரும்பிய கணவர் வீட்டிக்குள் சென்ற சமயத்தில் மனைவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்படுதை அவதானித்துள்ளார்.

இதனை அடுத்து, இவ்விடயம் தொடர்பில் அயவர்களின் உதவியுடன் கிராம சேவையாளருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த கற்பகபுரம் கிராம சேவையாளர் சாந்தரூபன் சடலத்தினை அவதானித்துடன், வவுனியா பொலிஸாருக்கு தகவலை வழங்கினார்.

வவுனியா பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் தடவியல் பொலிஸாரின் விசாரணைக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## ஓய்வூதிய திணைக்களத்தின் சேவைகள் இடைநிறுத்தம்

கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாக ஓய்வூதிய திணைக்களத்துக்கு சேவைப் பயணாளர்களின் வருகை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் கொவிட் - 19 திடீர் நிலை காரணமாக ஓய்வூதியத்தை செயற்படுத்துவதற்காக நேர் முகப்பரீட்சைக்காக ஓய்வூதியக்காரர்களை அழைத்தல் மற்றும் பல்வேறு பிரச்சினைகளுக்காக ஓய்வூதிய திணைக்களத்துக்கு வரும் அனைத்து ஓய்வூதியகாரர்களின் வருகை ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் அறிக்கும் வரையில் இடை நிறுத்துவதற்கு ஓய்வூதிய திணைக்களம் தீரமானித்துள்ளது.

இது தொடர்பாக ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மீண்டும் அறிவிக்கும் வரையில் எந்தவொரு ஓய்வூதியக்காரரும் ஓய்வூதிய திணைக் களத்திற்குள் வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறு தயவுடன் அறிவித்துக்கொள்வதாக அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஓய்வூதிய திணைக்களத்தின் மூலம் கிடைக்கவேண்டிய சேவைகள் இருக்குமாயின் அவற்றை 1970 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாவிலிருந்து 29 பேர் பூரண குணம்

இலங்கையில் கொரோனா தொற்றுக் குள்ளாகி சிகிச்சைப் பெற்று வந்தவர்களில் மேலும் 29 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, இதுவரை 3,357 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கிறீன் வீதியின் ஹெரோயினுடன் ஒருவரை நேற்று (13) மாலை கைது செய்ததாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து எண்பது மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

ஹெரோயினுடன் கைது செய்யப் பட்டவர் 31 வயதுடையவர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

துறைமுகப் பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து துறைமுகப் பொலிஸாருக்கு பொறுப்பாக உள்ள பிரதேசம் எங்கும் தேடுதல் வேட்டை மேற்கொண்ட பொலிஸார் கிறீன் வீதியில் உள்ள கைது செய்யப்பட்டவரின் தாயின் வீட்டிற்கு முன் தரித்து நின்ற ஸ்கூஊட்டி இருசக்கர வாகனத்தை சோதனை மேற் கொண்டதில் வாகனத்தில் இருக்கையின் அடிப்பாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஹெரோயின் மீட்கப்பட் டுள்ளதுடன் இருசக்கர வாகனத்தை எடுத்துச் சென்று விற்பனைக்கு ஹெரோயின் எடுத்து வந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்ததாக துறை முகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## புதிதாக 6 அரசியல் கட்சிகள் பதிவு

ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளாக புதிதாக 6 அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பதிவுசெய்யப் பட்டுள்ளன.

அருணலு ஜனதா பெரமுன, ஜனதா சேவக கட்சி, புதிய ஜனநாயக மார்க்சிஸ்ட் லெனினிசக் கட்சி, பிவித்துரு ஹெல உருமய, சமத்துவ கட்சி மற்றும் சிங்கள ராவய ஆகிய கட்சிகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கடந்த ஜனவரி மாதம் கோரப் பட்டிருந்தன.

அதற்கமைய 154 விண்ணப்பங் கள் கிடைக்கப்பெற்றதாக தெரி விக்கப்படுகின்றது.

அடிப்படை பரிசீலனைகளின் பின்னர் 121 கட்சிகளுடன் நேர்காணல் இடம்பெற்று அதில் குறித்த ஆறு கட்சிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பல்கலைக்கழகங்கள் மூடப்படமாட்டாது

கொரோனா தொற்றுக்கு மத்தியில் பல்கலைக்கழக கட்டமைப்பை மூடுவதற்கு எந்தவித ஏற்பாடுகளும் இல்லை என்று பல்கலைக்கழக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இது தொடர்பாக தெரிவிக்கையில் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் மற்றும் ஊயர்தர பரீட்சை மாணவர்கள் கொரோனா தொற்றுக்கு மத்தியில் தமது பரீட்சை நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுது பல்கலைக்கழகங்களை மூடுவது நடைமுறைச் செயற்பாடு அல்ல என்றும் அவர் மேலும் கூறினார்.

## ஊரடங்கு சட்டத்தை மீறிய 11 பேர் கைது

சில இடங்களில் அமுல் படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறிய மேலும் 11 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக தனிமைப்படுத் தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டு தொடர்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் இதுவரையில் கைது செய்யப்பட்டோர் எண்ணிக்கை 135 ஆகும் என்றும் பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோகன தெரிவித்தார்.

## உயர்தரப் பரீட்சையின் போது

# ஆள் மாறாட்டத்தில் ஈடுபட்டவர் கைது!




ஆள்மாறாட்டம் செய்து உயர்தரப் பரீட்சையில் தோற்றிய ஒருவர் திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சேனையூர் மத்திய கல்லூரியில் வெளிவாரியாக பரீட்சை எழுத வருகை தந்த ஒருவரே நேற்று (செவ்வாய்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

வெருகல் - மாவடிச்சேனை பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிப்பு!

திட்டமிடப்பட்டிருந்த அனைத்து பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

அத்துடன், ஏற்கனவே திட்டமிடப்பட்ட பதிவு மற்றும் மீள்பதிவு நடவடிக்கைகள் தொடரும் என திறந்த பல்கலைக்கழகம் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறே ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த கல்வி நடவடிக்கைள் தொடர்ந்தும் இடம்பெறும் என்பதுடன், எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னரே பரீட்சைகள் தொடர்பாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

திட்டமிடப்படும் பரீட்சைகள் தொடர்பாக ஒருவார கால குறுகிய காலத்தில் திறந்த பல்கலைக்கழகத்தினது இணையத்தளத்தில் அறிவிக்கப்படும் என குறிப்பிடப்படுகின்றது.

# மஞ்சளுக்கு தட்டுப்பாடு

## நுகர்வோரிடம் மன்னிப்பு கோரியது அரசாங்கம்



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மஞ்சளுக்கான தட்டுப்பாடு தற்காலிகமானது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரண இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், "மஞ்சள் இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அப்படி இருந்தும் இறக்குமதி செய்துள்ளனர். அவற்றை மீள ஏற்றுமதி செய்வது பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது மஞ்சளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதை ஏற்கின்றோம்.

இதற்காக நுகர்வோரிடம் மன்னிப்பு கோருகின்றோம். எனினும் 2021ஆம் ஆண்டளவில் உள்நாட்டு உற்பத்தியே போதுமானதாக இருக்கும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கம்போடியாவில் வெள்ளப்பெருக்கு 2 லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் நாசம்

கம்போடியாவில் புர்சாட் மாகாணத்தில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால், சுமார் 2 இலட்சம் ஏக்கர் விளை நிலங்கள் நாசமாகியுள்ளன.

அத்துடன் பருவகால மழையால் இது கடந்த வாரம் பல மாகாணங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது என்று பேரிடர் மேலாண்மைக்கான தேசிய குழுவின் செய்தித் தொடர்பாளர் குன் சோகா தெரிவித்தார்.

அத்துடன் வெள்ளப்பெருக்கில் சிக்கி 11பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த 11பேரில், 10 பேர் வெள்ளநீரில் மூழ்கியும் ஒருவர் மின்னல் தாக்கியும் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், முக்கிய வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இராணுவத்தினரும், பொலிஸாரும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிலையில், 2 ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி திரட்டுமாறு பிரதமர் ஹூன் சென் உள்ளூர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நாட்டின் வடமேற்கு, பட்டம்பாங் மற்றும் புர்சாட் ஆகிய இரண்டு மோசமான மாகாணங்களிலேயே மோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ரிசாட் எம்.பி....

"நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் கணக்காளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கணக்காளரைக் கைது செய்வதற்கும் சட்ட மா அதிபர் நேற்றுப் பணித்திருந்தார்.

நீதிமன்ற உத்தரவைத் தவிர்ப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினருக்கு உதவிய குற்றச்சாட்டில் அவருக்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இரண்டு வாகனங்கள் மற்றும் இரண்டு துப்பாக்கிகளும் பொலிஸ் காவலுக்கு எடுக்கப்பட்டுள்ளன" என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

## 10 நாட்களில்...

இதேவேளை, தனிமைப்படுத்தல் செயற்பாட்டை நிறைவுச் செய்த மேலும் 379 பேர் இன்று வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அந்த மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தால் பராமறிக்கப்படும் மூன்று தனிமைப்டுத்தல் நிலையங்களில் இருந்தே அவர்கள் இன்று வெளியேறவுள்ளனர்.

இதுவரை 52,090 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாட்டை நிறைவு செய்துள்ளதுடன் மேலும் 9,905 பேர் தொடர்ந்தும் 84 மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று (13) 6,190 பேருக்கு பி.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், மொத்தமாக இதுவரை 342,343 பேருக்கு பி.சீ.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

## மணியுடன்...

இறுதித் தெரிவு தொடர்பாக எனக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், அந்த உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை திகதியிடப்பட்டுள்ள அந்தக் கடிதம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்கள் சிலர் உள்பட்ட சட்டத்தரணி வி. மணிவண்ணன் சார்பு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

"தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் - அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு தங்களது பெயர் எமது இயக்கத்தால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் அந்தக் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு குறிப்பிட்ட சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தீர்கள்.

எனினும் எமது அமைப்பினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு நீக்கப்பட்டவர்களுடன் தொடர்புபட்ட வகையில் எமது அரசியல் இயக்கத்திற்கும் அதன் தலைமைக்கும் எதிரான கருத்துக்களை பொது வெளிகளிலும் முகநூலினூடாகவும் தெரிவித்து வருகின்றீர்கள்.

எமது அரசியல் இயக்கத்துடன் தங்களை இணைத்துப் பயணிக்க நல்லிணக்கங்களை தாங்கள் தொடர்ச்சியாக மீறி வருகிறீர்கள். எமது அரசியல் இயக்கத்தினை மத்திய குழுவின் தீர்மானங்களே கட்டுப்படுத்துவதாகும். எமது அரசியல் இயக்கத்துடன் இணைந்து பயணிப்பதாயின் மத்தியக் குழுத் தீர்மானங்களை எவரும் -சவாலுக்குட்படுத்த முடியாது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்" என்றும் பொதுச் செயலாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மணிவண்ணனைத் தொடர்ந்து...

முன்னதாக அவர் கட்சியிலிருந்து இடைநிறுத் தப்பட்டதாக கட்சியால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவரிடம் 14 நாள்கள் அவகாசத்தில் விளக்கம் கோரப்பட்ட நிலையில் அவர் பதிலளிக்காததால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பொதுச் செயலாளரினால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு...

இதேவேளை, மட்டக்களப்பு முன்னாள் மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜா, அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மாற்றப்பட்டுள்ளார்.

## அதிக விலையில்...

பொருட்கள் சிலவற்றின் விலைகளை குறைத்துள்ளது. எனவே, அரசாங்கத்தினால் நிர்னயிக்கப்பட்ட விலைக்கு அதிகமான விலையில் பொருட்கள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் அந்த வியாபாரிகள் மீது உடனடியாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் தாங்கள் வாங்கும் பொருட்களில் அதிக விலையில் உடனடியாக யாழ். மாவட்ட செயலகத்தின் முறைப்பாட்டு பிரிவு தொலைபேசி இலக்கமான 0212 22 50 00 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு உடனடியாக தகவலைத் தர முடியும். என்றும் அவர் தெரிவித்தார்.

## 110 பேருக்கு..

வலயத்துக்குள் உள்ள தொழிற்சாலைகளின் ஊழியர்கள் தங்கள் உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

கம்பஹா மாவட்டத்தில் 18 பொலிஸ் பகுதிகளுக்குள் தற்போது ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது. அந்தப் பிரதேசங்களில் மினுவாங்கொட கோவிட் -19 கொத்தணி தோன்றியதைத் தொடர்ந்து ஆரம்பத்தில் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டது.

# மாலுமியிடம் 12 மில்லியன் ரூபா அபராதம்



அண்மையில் இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில் தீப்பற்றிய நியு டயமன்ட் கப்பலின் உரிமையாளரிடமிருந்து, 12 மில்லியன் ரூபாய் அபராதமாக அறவிடப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்றத்தால் இந்த அபராதத் தொகை அறவிடப்பட்டுள்ளது.

கடல் சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட தீப்பரவலை தடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை கப்பலின் மாலுமி ஏற்றுக்கொண்டுள்ளதால், இந்த அபராதத் தொகை அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த கப்பலுக்குரிய நிறுவனத்திடமிருந்து 200 மில்லியன் ரூபாய் நட்டஈட்டை எதிர்பார்ப்பதாகவும் சட்டமா அதிபர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

# மரம் முறிந்து வீழ்ந்ததில் இரண்டு பெண்கள் பலி

பலாங்கொடை பின்னவல, வலவேவத்த பிரதேசத்தில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் இரண்டு பெண் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

வலவேவத்த அரச தேயிலை தோட்டத்தில் கொழுந்து பறத்து கொண்டிருந்த பெண்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக



பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த அவர்கள் பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

46 மற்றும் 47 வயதான வலவேவத்த தோட்டத்தில் வசித்த இரு பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

# சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றுங்கள்

சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றுமாறு அரசாங்கம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரண இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், "உலக மக்களை பெருமளவில் அச்சுறுத்திவரும் இந்த தொற்று பரவலை கட்டுப்படுத்திய நாடுகளில் இலங்கை தொடர்ந்தும் முக்கிய இடத்தை வகித்து வருகின்றது.

இந்த நிலையை தக்கவைத்துக்கொள்வதுடன் இந்த வைரசை கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசாங்கத்திற்கு காணப்படுகின்றது.

இதுகுறித்து திடமான நம்பிக்கையை அரசாங்கம் கொண்டிருக்கின்றது. இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

திவுலப்பிட்டிய மினுவாங்கொடையில் உள்ள தனியார் நிறுவனங்கள் மூலமான வைரஸ் கொத்தணியில் இதுவரையில் ஆயிரத்து 394 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

24,778 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 10,281 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். நாளாந்தம் இந்த தொற்று தொடர்பில் அரசாங்கம் கண்காணித்து வருகின்றது. இதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது மக்கள் வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதில் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டி ஆலோசனைகளை கடைப்பிடிப்பதுடன், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.




# முரளிதரனாகவே மாறிய விஜய் சேதுபதி

முத்தையா முரளிதரன் தோற்றத்திற்கு மாறிய விஜய் சேதுபதியின் '800' திரைப் படத்தின் மோஷன் போஸ்டர் வெளியாகியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் விஜய் சேதுபதி நடிக்கிறார்.

டெஸ்ட் அரங்கில் முதன்முறையாக '800' விக்கெட்டுகளைக் கைப்பற்றியவர் முரளிதரன். இதனால், இந்தப் படத்திற்கு '800' என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் படத்தை எம்.எஸ்.ஸ்ரீபதி இயக்குகிறார். தார் மோஷன் பிக்சர்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ராணா இப்படத்தை தயாரிக்கிறார்.

இந்தப்படம் கிரிக்கெட் சம்பந்தமானது என்பதால், நேற்று நடைபெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் சன்ரைசரஸ் ஹைதராபாத் அணிகள் மோதும் ஐ.பி.எல். லீக் போட்டியில் முத்தையா முரளிதரனும், விஜய் சேதுபதியும் சேர்ந்து இப்படத்தின் மோஷன் போஸ்டரை வெளியிட்டார்கள்.

இதில், முத்தையா முரளிதரன் தோற்றத்தில் விஜய் சேதுபதி இருக்கும் புகைப்படம் வருகிறது. இது இரசிகர்களை பெரிய அளவில் கவர்ந்துள்ளதுடன் தற்போது இந்த மோஷன் போஸ்டர் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

இதேவேளை, '800' படத்தின் படப்பிடிப்பு வரும் டிசம்பரில் தொடங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. படப்பிடிப்பு, இலங்கை, இங்கிலாந்து, இந்தியா மற்றும் அவுஸ்ரேலியாவில் நடத்தப்படவுள்ளதுடன் அடுத்த ஆண்டு இறுதியில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தேர்தல் பிரசாரத்தில் முகக்கவசத்தை தூக்கி எறிந்த ட்ரம்ப்!

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கொரோனா வைரஸ் (கொவிட்-19 தொற்றிலிருந்து மீண்ட பிறகு பங்கேற்ற முதலாவது தேர்தல் பிரசாரத்தில் தனது ஆதரவாளர்களை முத்தமிடத் தயார் எனக் கூறி முகக்கவசத்தை தூக்கி எறிந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமூக இடைவெளி இல்லாமல் புளோரிடாவின் சான்ஃபோர்டில் நடந்த பேரணியில், பெரும்பான்மையானோர் முகக்கவசமின்றி பங்கேற்றனர்.

இதன்போது உரையாற்றிய ட்ரம்ப், 'நான் இப்போது கொரோனா வைரஸ் தொற்றை கடந்துவிட்டேன். நான் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவன் என்று



மருத்துவர்கள் கூறுகிறார்கள். நான் மிகவும் சக்திவாய்ந்தவனாக உணர்கிறேன்.

உங்கள் அனைவரையும் நான் முத்தமிடுவேன். ஆண்களையும், அழகான பெண்களையும் முத்தமிடுவேன்' எனக் கூறி தனது முகக்கவசத்தை ஆதரவாளர்களை நோக்கி வீசி எறிந்தார்.

இதனையடுத்து கொரோனா வைரஸ் தொற்று விவகாரத்தில் ட்ரம்ப் தொடர்ந்து அலட்சியமாக செயற்பட்டு வருவதாக விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு உறுதியான நிலையில் இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ட்ரம்ப், நான்கு நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு வெள்ளை மாளிகை திரும்பிய நிலையில் திங்கட்கிழமை மீண்டும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரத்தைத் தொடங்கினார்.

# 35 பயணிகளுடன் பேருந்தில் பயணம் செய்த பெண்ணொருவருக்கு கொரோனா

கடவத்தையிலிருந்து காலிக்கு பேருந்தில் பயணம் செய்த பெண்ணொருவர் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, அந்தப் பேருந்தில் பயணம் செய்த ஏனைய 35 பயணிகளை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக ஒக்டோபர் நான்காம் திகதி கடவத்தையிலிருந்து காலிக்குச் சென்ற பேருந்தில் பயணம் செய்த பெண்ணே கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டுள்ளமை சோதனையின்போது உறுதியாகியுள்ளது.



மினுவங்கொட ஆடைதொழிற்சாலை ஊழியர் ஒருவரே இவ்வாறு பேருந்தில் பயணம் செய்துள்ளார் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவருடன் பேருந்தில் பயணம் செய்தவர்கள் அவருடன் நெருங்கிய தொடர்பிலிருந்தவர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள சுகாதார அதிகாரிகள் அவர்களை தங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனினும் பேருந்தின் சாரதியும் நடத்துனரும் மாத்திரமே தங்களை தொடர்புகொண்டுள்ளதாகவும் அவர்களை தனிமைப்படுத்தலில் இருக்குமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த 35 பயணிகள் இன்னமும் தங்களை தொடர்புகொள்ளவில்லை என குறிப்பிட்டுள்ள அதிகாரியொருவர், அவர்களால் அவர்களுக்கும் சமூகத்திற்கும் ஆபத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.